# ஞான வாழ்க்கை விழையல்

வலிவாக்கும்; வாழ்வுதனை வளமாக்கும்
தாள்பணியத் தெளிவாக்கும்; ஞானம் பெருக்கும்
கனிவாக்கும்; ஆதலால் எல்லோரும்
நாடுவீர் யோகிராம் சுரத்குமாரனை.

நேராக்கும் ; நெஞ்சுகதிச் சீராக்கும்
நீவிவிடக் கீழார்க்கும் சேமம் பிறக்கும்
துணையார்க்கும் செய்திடவழி நோக்கும்
வணங்குவீர் யோகிராம் சுரத்குமாரனை

குழைவாக்கும் ; இறைதேடும் விழைவாக்கும்
பிழைபோக வழிகாட்டும்; யோகம் வளர்க்கும்
செல்வாக்கும் கை கூடிச் சேர்ந்தாடும்
பாடுவீர் யோகிராம் சுரத்குமாரனை

தானாக்கும்; தான் தெரியத் தேனாக்கும்
மனம் குவியச் சிவமாக்கும்; வாலை நடம் புரியும்
வானாக்கும்; வந்தவரை விரிவாக்கும்
தேடுவீர் யோகிராம் சுரத்குமாரனை

மறையாகும் மறைபொருளின் உருவாகும்
அருணை மலைச்சுடராகும்; ஜெகமெங்கும் ஒளிரும்
இருள் நீக்கும் என்குரு மலர்ப்பாதம்
காணுவீர் யோகிராம் சுரத்குமாரனை

மனமே யோகி அருள் புரிவாய் என்
குருவின் ஆணை யோகபலம் அடைவாய்
யோகபலம் அடைவாய்
யோகபலம் அடைவாய்.